முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 09/2021

வாதி தரப்பு சாட்சி -1 ரவிசந்திரன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. பொதுவாக ஒரு ஆவணம் எழுதும் போது அந்த ஆவணத்தில் உள்ள தரப்பினரின் தகப்பனாரின் பெயர், முகவரி ஆகியவற்றை குறிப்பிட்டால் தான் அவரை குறிப்பிட்டு அடையாளம் காண முடியும் என்றால சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா-அ.4 ஆவணத்தில் மேற்கண்ட விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே மேற்படி ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.-4 ஆவணத்தில் அதை எழுதி கொடுத்த சிவகுரு என்பவரின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. முழு கிரைய தொகையையும் செலுத்தியதாக கண்டுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தை ஏன் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் எனது அத்தை தான் எழுதி கொடுத்தார். அதனால் தான் பதிவு செய்துகொள்ளவில்லை.

2. செல்லம்மாள் பெயரில் உனளள ஆ பட்டியல் சொத்தின் வீட்டுவரி இரசீதை எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்துள்ளேனா என்றால் எனது அத்தை பெயரில் வீட்டு வரி இரசீது எதுவும் இல்லை. வா.சா-ஆ.4 ஆவணத்தில் என் பெயரில் உள்ள வீட்டு வரி இரசீதை மாற்றி கொள்ள ஆட்சேபனை இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் ஊர் முக்கியஸ்தர்கள் அவ்வாறு எழுதினார்கள். வா.சா-ஆ.4 ஆவணத்தில் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் கிரைய பணம் வாங்கி கொண்டதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கில் 2 ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி ஆ பட்டியல் சொத்தை விற்பனை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். ஆ பட்டியல் சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என நான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

3. நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது அனுபவ படி அ பட்டியல் சொத்து மட்டும் தான் எனது அனுபவத்தில்

உள்ளது என்றும், ஆ பட்டியல் சொத்து 2ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அ பட்டியல் சொத்திற்கு கீழ்புறம் எனது சித்தப்பா மகன் சதீஷ்குமாருக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு, சதீஷ்குமார் மற்றும் எனது அத்தை ஆகியோருக்கு அவரவர் அனுபவிக்கும் நிலத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவான ஒரு சொத்தை பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்று பதிவு செய்து கொடுத்தால் தான் அதன் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்ய முடியும் என்றால் சரிதான். சதீஷ்குமார் கிரையம் பெற்ற ஆவணத்தை இரத்து செய்ய நான் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. நான் நடவடிக்கை எடுத்தாக காட்டப்படும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்னால் சொல்ல முடியாது என்றால் நியாபகம் இல்லை. ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டு சதீஷ்குமார் அனுபவத்தில் இருப்பதால் அதை பொறுத்து நான் எந்த பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் உள்ள பதிவு செய்த பத்திரத்தை பற்றி நான் எந்த பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆ பட்டியல் சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆ பட்டியல் சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

5. ஆ பட்டியல் சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் சுவாதீனத்திற்கு நான் எந்த இடையூறும் செய்யக்கூடாது என பிரதிவாதிகள் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அ பட்டியல் மற்றும் ஆ பட்டியல் சொத்தக்களை ஒரே அட்டவனையாக சொத்தாக இந்த வழக்கில் காண்பிக்கிவ்லலை என்றால் சரிதான். அ பட்டியல் சொத்தின் மேற்கே வீதீ உள்ளது என்றால் சரிதான். அ பட்டியல் சொத்திற்கு முன்புறம் ஆ பட்டியல் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. சதீஷ்குமார் இடத்திற்கு மேற்கு புறம் அ பட்டியல் சொத்து உள்ளது என்றால் சரிதான். ஆ பட்டியல் சொத்திற்கு மேற்கு மற்றும் கீழ்புறம் சதீஷ்குமார் இடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கே புறம் பொதுபாதை. கீழ்புறம் எனது இடம்.

6. எனது இடத்திற்கு கிழக்கே யார் நிலம் என்றால் எனது சித்தப்பா நிலம் உள்ளது. அ மற்றும் ஆ பட்டியல் சொத்திற்கு கீழ்புறம் சதீஷ்குமார் இடம் உள்ளது என்றால் சரிதான். சதீஷ்குமார் இடத்திற்கும் எனது இடத்திற்கும், எனது அத்தை இடத்திற்கும் பாதை சம்மந்தமான பிரச்சனை இல்லை என்றால் சரிதான். ஆ பட்டியல் சொத்தை எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 ஆவணத்தின் அடிப்படையில் ஆ பட்டியல் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நானாக தயார் செய்து கொண்டது என்றால் சரியல்ல.

7. அ பட்டியல் சொத்திற்கு முன்னால் தான் ஆ பட்டியல் சொத்து உள்ளது என்றும், அதை ஒப்புக்கொண்டால் எனக்கு விரோதமாகிவிடும் என்பதால் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் கழுகூர் கிராமம் கதவு எண்.71/A தற்போதும் அவர் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நில அபகரிப்பு பிரிவில் 1ம் பிரதிவாதி புகார் கொடுத்ததிலிருந்து தப்பிக்க இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**